ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

17.09.2026

1. அகமகிழ முருகா உமை வணங்கி
அருள்கடாட்சம் உலகோர் அடையவே
செகத்தில் அரங்கமகானும் அழைத்து
சரவண ஜோதியாய் நின்றருள் புரிகின்றேன்

2. அருள்புரிய உலகோர் நலம்பெற
ஆற்றல்பட பராபவ யாளி திங்கள்
வரமாக பஞ்சகடை குருவார அருளாசியை
வழங்குவேன் அரங்கனும் இதுகாலம்

3. காலமதில் பிரணவக் குடிலுக்கு வந்து
கண்டேன் என ஜோதியை வணங்கி
கோலமதாய் அருளமுதை உண்டு
குருவே உனை அல்லால் வேறுகதி அறியேன் என

4. அறியேனென சரணாகதி கண்டுமே
அன்னதான சேவையில் உதவியே
வறுமை பிணி கட்டம் இல்லாத
வாழ்வு தா என வேண்டி வர

5. வருவோர்க்கு அரங்கன் யானும்
வரம் தந்து அவர்கள் வாழ்வில்
குருவே யாவுமாக நின்றருளி
குறைகள் இடர்கள் வாராத வண்ணம்

6. வண்ணமுடன் வளமும் பலமும்
வல்லமையும் சர்வ ஜெயமும்
எண்ணும் போது ஈடேற்றம் தந்து
எல்லாம் கிட்ட பேரருள் புரிவேன்

7. அருள் புரிவேன் என் பிள்ளைகளாக
அங்கீகாரம் தந்து அவர்கட்கு
பெருமை சேர்ப்பேன் செல்லுமிடமெல்லாம்
பொருள் வளமும் ஆயுள்பலமும் கூட்டி

8. கூட்டியே புண்ணிய வழியையும்
குறிப்பாக சன்மார்க்க வழியையும்

விட்டகலா கடை காலமும் அவர்களை
வழிநடத்தி பெரும் பேறு காணச் செய்வேன்

9. செய்யவே சன்மார்க்க வழியே
சித்தி தரும் உயர் வழியென
அய்யமற உலகோர் ஏற்றுவர
அரங்கனென் அவதாரம் நிகழ்ந்திருக்க

10. இருக்கவே பிரணவக் குடிலை
எவர் அடைந்து வந்துமே
கருத்தாக சைவநெறி ஏற்றால்
கலியினில் இனி பிறவி காண்பதில்லை

11. பிறவா நல்கதிதனை அடைய
பிறப்பில் புண்ணிய பலமும் வேண்டும்
அறமாக என் தருமவழி உதவிட
அளவிலா புண்ணியமாகி கடைத்தேறுவர்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி